## வீதி பாதுகாப்பிற்கான தேசிய மன்றம் -2013

வீதி பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1998 இன் 5 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் 213 ‘‘அ’’ பிரிவு மற்றும் 237 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 2009 ஏப்ரல் 04 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப் படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணம் 135 | பதவியணியினருக்காக முறையான நிதி அதிகாரங்கள் கையளிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 371(4) | சில்லறைக் காசு கட்டுநிதியாக 2006 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 2,000 ஆன முற்பணத் தொகை 7 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 756 மற்றும் 757 | மன்றத்தினால் மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கைகளின் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 திசெம்பர் 18 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான விபரங்கள், அச்சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி, பெறுமதி மற்றும் வருடாந்த பெறுமானத் தேய்வு போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் அதிகாரச்சட்டம் | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் இம்மன்றம் வருமான வரியிலிருந்து விடுவிக்கப்படாமல் இருந்த போதிலும், முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டிலும் வரி கொடுப்பனவு தேவைப்பாட்டை இனங்கண்டு வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் போது மன்றத்தின் நிதி விளைவுகள் ரூபா 33,965,367 மிகையொன்றாக இருந்ததுடன், அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 27,061,203 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 6,904,164 தொகையான அதிகரிப்பினைக் காட்டியது. மன்றத்தின் பிரதான வருமான மூலமான காப்புறுதி கம்பனிகளிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற பங்களிப்பினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 1,439,166 ஆலும் திறைசேரி உண்டியல் வட்டி வருமானம் ரூபா 6,111,453 ஆலும் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதி விபத்துக்கள் அற்ற சமூகமொன்றைத் தோற்றுவித்தலே இம்மன்றத்தின் பிரதான நோக்கமானதுடன் இந்தநோக்கத்தினை அடைந்து கொள்கையில் பின்வரும் பணிகள் தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, போக்குவரத்து அமைச்சு, பொலிஸ் திணைக்களம் போன்ற நிறுவனங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்பொன்று பேணிவரப்பட்டமைக்குச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) வீதிப் பாதுகாப்புகள் தொடர்பில் செயற்திட்டங்களைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்

(ii) அரசாங்க மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களில் வீதிப் பாதுகாப்பு மற்றும் தொடர்புடைய பணிகளை ஒருங்கிணைத்தல்.

(iii) வீதிப் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்காக நிதிசார் மற்றும் ஏனைய உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்.

(iv) வீதிப் பாதுகாப்புடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்,

(v) ஒத்த சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணுதல் மற்றும் அனுபவங்கள் குறித்த அறிவினை பரிமாறிக் கொள்ளல்.

(vi) தொடர்புடைய விடயங்கள் மீதான தகவல்களைச் சேகரித்தல், ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் களப் பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

(vii) வாகன விபத்துக்கள், வாகனங்களின் அளவு, அவற்றின் பண்புகளும் அமைப்பும், வீதிப் பாதுகாப்பு தொடர்பான உள்நாட்டு மற்றும் சர்வதேச புள்ளிவிபரங்கள் தொடர்பான களஞ்சியமொன்றைப் பேணிச்செல்லல்.

(ஆ) 2004 திசெம்பர் மாதத்தில் தாபிக்கப்பட்ட இம்மன்றத்தின் பிரதான நோக்கங்களில் இம்மன்றத்திற்கு வீதி விபத்துக்களை ஏற்படுத்தி விட்டு தப்பிச் செல்லும் மற்றும் இனங்காணப்படாத வாகனங்களினால் விபத்துக்குள்ளாகி மரணித்த அல்லது காயமடைந்த நபர்களுக்கு அல்லது அவர்களில் தங்கியிருப்போருக்கு நிதி நிவாரணமளித்தலேயாகும். இது தொடர்பாக மேற்கொண்ட பரிசீலனையில் மன்றம் ஆரம்பிக்கப்பட்ட வருடத்திலிருந்து 2013 ஆம் ஆண்டின் இறுதிவரை கிடைக்கப்பெற்றிருந்த 236 விண்ணப்பங்களில் 148 விண்ணப்பங்களிற்காக ரூபா 6,340,000 தொகை இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்தமை வெளிப்பட்டது. இழப்பீடுகள் வழங்கப்பட்டிருந்த 73 விண்ணப்பங்களிற்கான உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள் கிடைப்பதில் காணப்பட்ட தாமதம் காரணமாக அவற்றிற்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகள் வரையான தாமதம் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது நிதியத்திற்கு காப்புறுதி கம்பனிகளிலிருந்து ரூபா 25,921,510 தொகை கிடைத்திருந்ததுடன் இழப்பீடு செலுத்தும் செயற்பாட்டிற்காக ரூபா 3,265,000 அல்லது அண்ணளவாக 12.60 சதவீதத்திற்கு அண்மித்த அளவே செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1998 இன் 05 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் கட்டளை இலக்கம் 02 இன் பிரகாரம் காப்புறுதி உரித்தொன்று அல்லது பிணையொன்று சமர்ப்பிக்கும் ஒவ்வொரு நபரினாலும் ஒரு சதவீதப் பங்களிப்பை மன்றத்திற்கு அனுப்பிவைக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது 02 காப்புறுதிக் கம்பனிகளால் அனுப்ப வேண்டிய பங்களிப்புத் தொகையை விட ரூபா 6,621,988 குறைத்து அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன், நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு காரணமாக மன்றத்தினால் "மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்துடன் முழுக் காப்புறுதி தவணை அடிப்படையில் 1 சதவீத பங்களிப்பு அறவிடப்பட வேண்டுமென சட்டம் திருத்தம் செய்யப்படாமையால் மூன்றாம் தரப்பு உறுதிகளிலிருந்து 1 சதவீத பங்களிப்புக் கணிப்பீடு இலகுவாக இருந்த போதும், முழுமையான காப்புறுதி உறுதியொன்றின் தவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள மூன்றாம் தரப்பினரின் பங்களிப்பை கணக்கீடு செய்வது சிக்கலானமையால் இந்நிலைமை ஏற்பட்டதாக" கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

(இ) 2004 பெப்ரவரி 24 ஆம் திகதிய 1368/11 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மாதிரிப்படிவ இலக்கம் 01 இன் பிரகாரம் ஒவ்வொரு காப்புறுதி கம்பனியாலும் அறவிடப்படுகின்ற குறித்த பங்களிப்புத் தொகையை எதிர்வரும் மாதத்தின் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மன்றத்தினால் அப்பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் இரண்டு வாகனங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 45,390 பெறுமதியான எரிபொருள் பட்டியல்களில் அவ்வாகனங்களின் பதிவிலக்கம் மற்றும் எரிபொருள் பெற்றுக்கொண்ட திகதி என்பன குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 4.3 நிதியத்தின் குறைப்பயன்பாடு

சபைக்குரிய வங்கிக் கணக்கில் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 6.0 மில்லியன் காணப்பட்டதுடன், இறுதி வரையில் அது ரூபா 25.35 மில்லியனாக அதிகரித்திருந்தது.

சபையின் செயற்பாட்டிற்காக போதியளவு தொகையை வைத்துக்கொண்டு எஞ்சிய மேலதிக நிதியை திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு வினைத்திறனான முதலீடு ஒன்றில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 14 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், பின்னர் திருத்தங்களுடன் கூடிய நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு 2014 மே 31 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதாவது 74 நாட்கள் தாமதத்தின் பின்னராகும்.

### 5.2 கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி என்பவற்றை அடைந்துகொள்வதற்காக கூட்டிணைந்த திட்டமொன்றும் செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக போக்குவரத்து அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் துறைகள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட பல்வேறு குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதி முகாமைத்துவம்
(இ) முதலீடு மற்றும் வட்டிக் கணிப்பீடு
(ஈ) காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து கிடைக்கும் பங்களிப்பினை இனங்காண்பதும் அனுப்பிவைப்பதற்கான முறைமைகளும்
(உ) நட்டஈட்டுக் கொடுப்பனவு